විශ්‍රාම වැටුප් දෙපාර්තමේන්තුව
ஓய்வூதியத் திணைக்களம்
DEPARTMENT OF PENSIONS

මාලිගාවත්ත ලේකම් කාර්යාලය, මාලිගාවත්ත, කොළඹ 10. மாளிகாவத்தை செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10. Maligawatte Secretariat, Maligawatte, Colombo 10.

අංකය / இல. / No. ஓஊ/சுற்றுநிரூபம்/2009 | දිනය / திகதி / Date 17.12.2009

**ஓய்வூதிய சுற்றுநிரூபம் 3/2009 (திருத்தம் - 01)**

அனைத்து மாவட்டச் செயலாளர்கள்/பிரதேசச் செயலாளர்கள்,
முப்படைத்தளபதிகளுக்கும்,

## ஆயுதப்படையினருக்கான ஓய்வூதியத்தினை மீள் திருத்தம் செய்தல் (2009)

ஓய்வூதியத் திணைக்களச் சுற்றுநிரூபம் 3/2009 ஐ திருத்தம் செய்து, நான் கீழ் வரும் அறிவுறுத்தல்களை வெளியிடுகிறேன்.

### 01. கொடைப்பத்திரம் வழங்குதல்

மேற்குறித்த சுற்றுநிரூபத்தின் 02 "அ" வின் கீழ் தற்போது சேவை ஓய்வூதியமொன்றினை பெற்றுக்கொண்டிருப்பவர்களின் ஓய்வூதியம் மீள்திருத்தம் செய்யப்பட்டு குறித்த மாதிரிப் படிவங்கள் இத்திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் உங்களிடம் சமர்ப்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை கீழ்வருமாறு திருத்தம் செய்கிறேன்.

திருத்தப்பட்ட ஓய்வூதியக் கொடைக்கான ஓய்வூதிய இலக்கம் ஓய்வூதியத் திணைக்களத்தினால் வழங்கப்படுவதுடன், அதன் பின்னர் திருத்தப்பட்ட கொடைப்பத்திரம் அவ் அவ் படைகளின் ஓய்வூதியப் பிரிவுகளினால் வழங்கப்பட வேண்டியதுடன், அதனை அடிப்படையாகக் கொண்டு குறித்த கொடுப்பனவு நடவடிக்கைகள் பிரதேச செயலாளரினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 02. விதவைகள் / தபுதாரர் மற்றும் அனாதைகள் பங்களிப்புப் பண அறவீடு

1. 55 வயது ஆகும் வரை ஊதியம் வழங்கப்படுமாயின் அச்சம்பளத்தில் இருந்து விதவைகள் / தபுதாரர் மற்றும் அனாதைகள் பங்களிப்புப் பணம் அறவிடல் வேண்டும்.
2. அப் பங்களிப்புப் பண அறவீட்டினை உடனடியாக ஆரம்பித்தல் வேண்டும்.
3. நிலுவைப் பங்களிப்புப் பணத்தினை கணக்கிட்டு அதனை தற்போது அறவிடும் தவணைக்கு சமமான அளவில் அறவிடுதல் வேண்டும்.



| | Telephone | Fax | | Telephone | Fax | | Telephone |
|---|---|---|---|---|---|---|---|
| Director General | 2431647 | 2342078 | W&OP | 2332346 | 2432214 | Policy | 2329580 |
| Director | 2432008 | 2342078 | PSPF | 2324375 | 2332347 | Forces | 2320439 |
| Director (F) | 2434974 | 2391403 | L.G.U. | 2342525 | 2342525 | Computation | 2434414 |
| Internal Auditor | 2329634 | 2329634 | Registration | 2329178 | - | Payments | 2431612 |

E-mail: pensions@sltnet.lk
Web site: www.pensions.gov.lk

5. விவாகமாகாத அடிப்படையின் கீழ் பங்களிப்புப் பணம் மற்றும் 2.5% வட்டியுடன் மீள் கொடுப்பனவு செய்யப்பட்டிருப்பின் அத்தொகையினையும் மேற்குறித்தவாறு அறவிடல் வேண்டும்.

6. பங்களிப்புப் பணக் கணக்கீடு எனது சுற்றுநிரூபம் 3/2008 பிரகாரம் செய்யப்படல் வேண்டும். பங்களிப்புப் பணம் மற்றும் 2.5% வட்டிப்பணம் மீள் கொடுப்பனவு செய்யப்பட்டிருப்பின் அம்முழுத்தொகைக்கும் (பங்களிப்புப் பணம் + வட்டி) மேலே 3/2008 இன் படி வட்டி அறவிடப்படல் வேண்டும்.

03. <u>விதவைகள் / தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய உரிமமளித்தல்</u>

கீழ்வரும் சந்தர்ப்பங்களில் விதவைகள் / தபுதாரர் மற்றும் அனாதைகள் உரிமத்தினை வழங்குதல் வேண்டும்.

i. மருத்துவ காரணங்களின் கீழ் ஓய்வு பெற்றதன் பின்னர் திருமணம் செய்துள்ளார். 55 வயது வரை ஊதியம் வழங்கப்படுமாயின் மற்றும் கொடுத்த பங்களிப்புப் பணத்தினை திரும்பப் பெற்றிருப்பின், வயது 55 பூர்த்தியாக முன்னர் திருமணம் செய்யின் பங்களிப்புப் பணத்தினை அறவிட்டு விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய உரிமத்தினை வழங்குதல்.

ii. ஓய்வூதியம் வழங்கப்படாவிடினும் நலிவு ஓய்வூதியம் வழங்கப்படின் மற்றும் 55 வயது வரை ஊதியம் வழங்கப்படின் மற்றும் 55 வயதிற்கு முன்னர் திருமணம் செய்யின் பங்களிப்புப் பணத்தினை அறவிட்டு விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய உரிமத்தினை வழங்குதல்.

iii. 12 வருட சேவைக்காலத்தின் பின்னர் படைச் சேவையிலிருந்து விலகியதன் பின்னர் பங்களிப்புப் பணத்தினை திரும்பப் பெற்றிருப்பின் மற்றும் திரும்பவும் தொண்டர் படையணியில் இணைந்து அதில் 22 வருட சேவைக்காலம் பூர்த்தியடைய முன்னர் பயங்கரவாத காரணங்களின் கீழ் மரணித்தல் மற்றும் தொண்டர் படையணிக் காலத்தினுள் திருமணம் செய்திருப்பின் பங்களிப்புப் பணத்தினை அறவிட்டு விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய உரிமத்தினை வழங்குதல்.

கே.ஏ.திலகரத்ன,
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்.

பிரதிகள் :-
01. ஜனாதிபதி செயலாளர் - ஜனாதிபதி அலுவலகம்.
02. பிரதமரின் செயலாளர் - பிரதமர் அலுவலகம்.
03. செயலாளர் - அரச நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு
04. செயலாளர் - நிதி அமைச்சு
05. கணக்காய்வாளர்.